பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

11 09 2024 **WENESDAY** 12 40 **PM**

வணக்கம், ஆகாஷ்வாணி - செய்திகள்
தலைப்புச் செய்திகள்

1. நாட்டின் சிறந்த செவிலியர்களுக்கான தேசிய விருதுகளை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

2. செல்ஃபோன் தயாரிப்பு, கணினி உதிரி பாகங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் செமிகண்டக்டரின் உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்குவதற்கு மத்தியஅரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

3. பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் கார்பன் வாயு குறைப்பு மூலமாக சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ள சர்வதேச அளவில் ஒருமித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று பிரதமர் தெரிவித்துள்ளார்.

4. தமிழகத்தில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 120வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது. இதனையொட்டி, பள்ளி கல்லூரிகளில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

5. சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய சாம்பியன் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

நாட்டின் சிறந்த செவிலியர்களுக்கு வழங்கப்படும் தேசிய விருதை குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று வழங்கினார்.

குடியரசுத் தலைவர் மாளிகையில் நடைபெற்ற இதற்கான விழாவில், இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

1973ஆம் ஆண்டு முதல் மத்திய சுகாதாரம் மற்றும் குடும்பநல அமைச்சகத்தின் சார்பில் தேசிய ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றன.

போரின் போது, காயமடைந்த வீரர்களுக்கு அயராது சிகிச்சை வழங்கிய ப்ளாரன்ஸ் நைட்டிங்கேல் என்ற செவிலியரின் நினைவாக இந்த விருதுகள் வழங்கப்படுகின்றன.

>>>>>><<<<<<

செல்ஃபோன் தயாரிப்பு, கணினி உதிரி பாகங்கள் தயாரிப்பில் பயன்படுத்தப்படும் செமிகண்டக்டரின் உற்பத்தி மையமாக இந்தியாவை உருவாக்குவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் நொய்டாவில் செமிக்கான் இந்தியா 2024 என்ற மூன்று நாள் சர்வதேச மாநாட்டை தொடங்கி வைத்துப் பேசிய

அவர், இந்த தொழில்நுட்பத்தில் இந்தியா எட்டாவது பெரிய நாடாக விளங்குவதாக தெரிவித்தார்.

நாட்டில் உள்ள ஆதாரங்களை பயன்படுத்தி, உலகிற்கு வழங்கும் தொழில்நுட்பத்தை ஊக்கப்படுத்த மத்திய அரசு நடவடிக்கை மேற்கொண்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

21ஆம் நூற்றாண்டில் செமிகண்டக்டர் உற்பத்தி அத்தியாவசிய தேவையாக எழுந்திருப்பதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஸ்வினி வைஷ்ணவ், அதிநவீன தொழில்நுட்பத்தை சாதாரண மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு சென்ற மத்திய அரசின் எதிர்கால திட்டங்கள் தகவல் தொழில்நுட்ப உலகில் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவித்தார்

உலக அளவில் அதிநவீன தொழில்நுட்பத்தை மேலும் பரவலாக்குவதற்கு செமிகண்டக்டர் துறையில் சிறந்த திட்டங்களை செயல்படுத்த அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

நவீன தொழில்நுட்பத்தை பரவலாக தயாரிப்பதற்கு இந்தியா திறன் கொண்டது என்றும் இந்த துறையில் தலைசிறந்து விளங்கும் நோக்குடன் திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

>>>>>><<<<<<

பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி மற்றும் கார்பன் வாயு குறைப்பு மூலமாக, அதிகரித்து வரும் சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்ள முடியும் என்றும், சர்வதேச அளவில் இதற்கான ஒருமித்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வலியுறுத்தியுள்ளார்.

காணொலி காட்சி வாயிலாக பசுமை ஹைட்ரஜன் உற்பத்தி தொடர்பான சர்வதேச மாநாட்டில் பேசிய அவர், ஒருமித்த நடவடிக்கைகள் மூலமாகவே சுற்றுச்சூழலை பாதுகாக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகரிப்பதால், அதற்கான விலை குறையும் என்றும் வலுவான கட்டமைப்பு அதற்கு அவசியம் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழல் சவால்களை எதிர்கொள்வதற்கு உடனடி நடவடிக்கை தேவை என்று சுட்டிக்காட்டிய அவர், உலகளாவிய கொள்கை வடிவமைக்கப்படட வேண்டும் என்றும் இந்தியா அதற்கு ஆதரவு அளிக்கும் என்றும் கூறினார்.

சுற்றுச்சூழல் மாசை குறைப்பதற்கு ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டில் இந்தியா முதல் முதலாக கையெழுத்திட்டது என்றும், இதற்காக அர்ப்பணிப்புடன் செயல்பட்டு வருவதாகவும அவர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளாக மரபு சாராத எரிசக்தியை உற்பத்தி செய்வதில் இந்தியா தொடர்ந்து முன்னிலை வகித்து வருவதாக குறிப்பிட்ட பிரதமர், சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே அரசின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

இதற்காக, புதிய படைப்புகளுக்கும், துறைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்படுவதாக அவர் கூறினார்.

கார்பன் வாயுக்களை குறைப்பதில் முக்கியப் பங்கு வகிக்கும் பசுமை ஹைட்ரஜன் உற்பத்தியை அதிகப்படுத்தி, ஏற்றுமதி செய்து, உற்பத்தி மையமாக இந்தியா உருவெடுப்பதற்கான அனைத்து வசதிகளையும் மத்திய அரசு ஏற்படுத்தி வருவதாக அவர் தெரிவித்தார்.

தொழில்துறை, சுற்றுச்சூழல் ஆராய்ச்சியாளர்களின் ஒத்துழைப்புடன் கூடிய உடன்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் கூறினார்.

>>>>>><<<<<<

நாடுமுழுவதும் சைபர் குற்றங்கள் மற்றும் நிதி மோசடியில் ஈடுபட்ட ஒரு கோடிக்கும் அதிகமான செல்போல் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

2 லட்சத்து 27 ஆயிரம் செல்பேசிகளின் இணைப்புகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அரசு கூறியுள்ளது.

**Sanchar Saathi** எனப்படும் தேடுதல் முயற்சியின் மூலம் 3 லட்சத்திற்கும் மேற்பட்ட மோசடி எண்கள் கண்டறியப்பட்டதாகவும் 50-க்கும் மேற்பட்ட சேவையாளர்கள் தடை செய்யப்பட்டுள்ளதாகவும் மத்திய தொலைத்தொடர்பு துறை தெரிவித்துள்ளது.

அடையாளம் தெரியாத 3 புள்ளி 5 லட்சம் குறுஞ்செய்தி சேவைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய அரசு கூறியுள்ளது.

மத்திய தொலைத்தொடர்பு துறையும், இந்திய தொலைத்தொடர்பு முறைப்படுத்துதல் ஆணையமும் இணைந்து இந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

அக்டோபர் 1ஆம் தேதி முதல் இது நடைமுறைப்படுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<<

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 120வது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுகிறது.

தமிழகத்தில் அவரது திருவுருவச் சிலைக்கு அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டது.

திருநெல்வேலியில் உள்ள அவர் பயின்ற பள்ளி வகுப்பறையில் உள்ள அவரது சிலைக்கு மாணவ மாணவிகள் மலர்தூவி மரியாதை செலுத்தி, பாரதியாரின் பாடல்களை பாடினர்.

பாரதியார் பிறந்த தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரத்தில் இன்று சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக எமது செய்தியாளர் கூறுகிறார்.

(வாய்ஸ் பைட் – லெட்சுமணன் 48 செகண்ட்ஸ்)

பாரதியாரின் நினைவு தினம் பள்ளி கல்லூரிகளில் இன்று விமரிசையாக நடைபெற்றது.

சேலம், அரசினர் மகளிர் கல்லூரியில் நடைபெற்ற விழாவில், பாரதியாரின் படைப்புகள் காலத்தை கடந்தும் இளையதலைமுறையினருக்கு உத்வேகம் அளிப்பதாக மாணவிகள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் – மாணவிகள் 40 செகண்ட்ஸ்)

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரில் இன்று அதிகாலை இந்திய எல்லைப்பகுதியில் பாகிஸ்தான் துப்பாக்கிச் சூடு நடத்தியதில் பாதுகாப்புப் படை வீரர் ஒருவர் காயமடைந்தார்.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி, பாகிஸ்தான் இத்தகைய செயலில் ஈடுபட்டதாகவும் இதற்கு தக்க பதிலடி கொடுக்கப்பட்டதாகவும் ஜம்மு காஷ்மீரின் எல்லைப் பாதுகாப்பு செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தெலங்கானா மாநிலம், கோதாவரி ஆற்றின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதை அடுத்து, அங்கு இரண்டாம் கட்ட வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனமழை தொடர்ந்து பெய்து வருவதால், ஆற்றின் நீர்மட்டம் மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளதாக **Badradi Kothagudam** மாவட்ட ஆட்சியர் திரு. **Jitesh V Patil** கூறியுள்ளார்.

>>>>>><<<<<<

உலகளாவிய சர்ச்சைகள் அதிகரித்து வரும் நிலையில், முதல்முறையாக 400 போர்க்கப்பல்கள் பங்கேற்கும் **Ocean 2024** என்ற பெயரிடப்பட்ட ஒத்திகையை ரஷ்யா நேற்று தொடங்கியுள்ளது.

ஒரே நேரத்தில் பசிபிக், ஆர்ட்டிக் பெருங்கடல்கள், மத்திய தரைக்கடல், கஸ்பியன் மற்றும் பால்டிக் கடல்களில் இந்த ஒத்திகை நிகழ்ச்சிகள் நடைபெறுவதாக ரஷ்ய அதிபர் விளாடிமிர் புட்டின் கூறியுள்ளார்.

இந்த ஒத்திகையில் நீர்மூழ்கி கப்பல்கள், 120 போர் விமானங்கள், 90 ஆயிரம் ராணுவ வீரர்கள் பங்கேற்கவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய சாம்பியன் ஹாக்கிப் போட்டியில் இந்தியா இன்று மலேசியாவை எதிர்கொள்கிறது.

இப்போட்டி பிற்பகல் மணி 1-15-க்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

தெற்காசிய ஜூனியர் தடகள சாம்பியன் போட்டிகள் சென்னையில் இன்று தொடங்குகிறது.

இப்போட்டி சென்னை நேரு விளையாட்டு அரங்கில் மூன்று நாட்கள் நடைபெறவுள்ளது.

>>>>>>END<<<<<<